# DEPOSITION OF WITNESS

**Crl.Misc.39**
**(CHAPTER XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM**

S.C.No.3/2016

Deposition of witness for Prosecution – PW3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சின்ராஜ் | Caste | : | |
| S/o.W/o.D/o. | : | சேகர் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act No.44 of 1969, on this 24.06.2024.

A2 present. A1 absent. Petition u/s.317 Cr.PC filed and allowed.

**முதல் விசாரணை;**

நான் மூக்குதி பாளையத்தில் குடியிருக்கிறேன். நான் செல்போன் ரிப்பேர் செய்யும் கடை வைத்திருக்கிறேன். 22.12.2014 ம் தேதி காலை 10.00 மணி அளவில் எனது கடையில் செல்போன் சர்வீஸ் செய்து கொண்டிருந்தேன். நாமக்கல்லிலிருந்து சேலம் நோக்கி ஒரு மணல் லாரி வந்து கொண்டிருந்தது. சந்தியூர் பிரிவில் டிவைடரில் லாரி ஏறி எதிர்திசையில் வந்த ஜோதி பஸ் மீது இடித்துவிட்டு அதற்கு

இடதுபுறமாக வந்த இருசக்கர வாகனத்தில் மோதி காட்டுக்குள் இறங்கி நின்றுவிட்டது. ஜோதி பஸ்சில் இருந்தவர்கள் சத்தம் போட்டுக்கொண்டிருந்தார்கள். நான் போய் பார்த்தபோது ஒரு அம்மா பஸ்சிற்குள் இறந்துகிடந்தார். இருசக்கர வாகனத்தில் வந்தவர்களில் 2 பேர்கள் இறந்துவிட்டார்கள். அதில் வந்த குழந்தை தனியாக விழுந்துவிட்டது. குழந்தையும் மருத்துவமனைக்கு செல்லும் வழியில் இறந்துவிட்டது. லாரி க்ளீனர் ஒருவரும் இறந்துவிட்டார். மொத்தம் 5 பேர்கள் சம்பவத்தில் இறந்துவிட்டார்கள். போலிசார் என்னை மறுநாள் விசாரித்தார்கள்.

1 மற்றும் 2 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

சந்தியூர் ஆட்டையாம்பட்டி பிரிவு ரோடு என்பது தேசிய நெடுஞ்சாலையிலிருந்து மேற்கே செல்லும் சாலை என்றால் சரி. மேற்படி பிரிவு ரோடிற்கு தென்புறம் என்னுடைய கடை உள்ளது. என் கடைக்கு முன்பு சம்பவம் நிகழ்ந்ததால் உடனே சென்று நான் பார்த்தேன். சம்பவத்தன்று நான் சம்பவ இடத்தில் இல்லை என்றும் நான் சம்பவத்தை பார்க்கவில்லை என்றும் நான் சொன்னவாறு எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,

Principal Sessions Judge, Salem.